செய்தி வெளியீடு எண்: 057 நாள்: 19.01.2018

# போக்குவரத்துத் துறையின் செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் எட்டு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள், பொது மக்களுக்கு சிறப்பான போக்குவரத்து சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 22,509 பேருந்துகள் மற்றும் 1,40,615 போக்குவரத்து பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்கள், மலைப்பகுதிகள் போன்ற தொலைதூர இடங்களுக்கும் நாளொன்றுக்கு ஏறத்தாழ 88.64 இலட்சம் கிலோ மீட்டர் தூரம் பேருந்துகளை இயக்குகின்றன. இதன் மூலம், நாளொன்றுக்கு 2.02 கோடி மக்கள் பயணம் செய்கின்றனர். டீசல் மற்றும் மசகு எண்ணெயின் விலை அடிக்கடி உயர்த்தப்படுவதாலும், புதிய பேருந்துகளின் விலை உயர்வு, உதிரி பாகங்களின் விலை உயர்வு, பராமரிப்பு செலவுகள், பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதிய உயர்வு, சட்டரீதியான பணப்பயன்கள் மற்றும் போக்குவரத்தினை இயக்குவதற்கான இதர செலவுகள் அதிகரித்துள்ளதால், அதற்கு கூடுதல் செலவு ஏற்படுகிறது. இக்கூடுதல் செலவுகளினால், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பேருந்துகளை இயக்குவதற்குத் தேவையான வருவாய் ஈட்ட இயலவில்லை.

இதனால் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்படும் தொடர்ச்சியான வருவாய் இழப்பால் தொழிலாளர்களுக்காக செலுத்த வேண்டிய பணப்பயன்களை உரிய நேரத்தில் செலுத்த இயலாமல் தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்படுவதுடன் பேருந்துகளை சிறப்பாக பராமரித்து இயக்குவதிலும் அவ்வப்போது இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இது போக்குவரத்து தொழிலாளர்களின் மத்தியில் பெரும் தாக்கத்தையும், மனரீதியான சோர்வையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது, போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் விலை உயர்வுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு மானியம் வழங்கி வரும் நிலையிலும் கூட, வருவாய்க்கும், இயக்க செலவிற்கும்

உள்ள இடைவெளி இழப்பு நாளொன்றுக்கு ரூ.9 கோடி என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது இயங்கும் அரசுப் பேருந்துகளில் 75 சதவிகிதம் பேருந்துகள் 6 வருடங்களுக்கு மேற்பட்டவையாக இருப்பதால் அப்பேருந்துகளின் இயக்கத்திறனும் படிப்படியாகக் குறைந்து வருகின்றன.

**பணியாளர்களுக்கான வருடாந்திர ஊதிய உயர்வு, ஓய்வூதியங்கள், எரிபொருட்களின் விலை உயர்வு, இயக்கத்திறனை அதிகரிக்கும் வகையில் புதிய பேருந்துகள் வாங்குதல், பேருந்துகள் பராமரிப்புக்கான செலவு உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டும், கடைசியாக 6 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது, 18.11.2011 அன்று ரூ.43.10க்கு விற்ற ஒரு லிட்டர் டீசல், இன்று (19.1.2018), ரூ.65.83 என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. அதாவது, சுமார் 50 சதவீதம் விலை உயர்ந்துள்ளதை கருத்தில் கொண்டும், பேருந்து கட்டணங்களை மாற்றி அமைக்க வேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு தமிழ்நாடு அரசு தள்ளப்பட்டுள்ளது.**

## I. <u>மாற்றியமைக்கப்பட்ட பேருந்து கட்டணம் :</u>

(அ) தமிழ்நாட்டில் பேருந்து கட்டணம் 2001 ஆம் ஆண்டு முதல் இரண்டு முறையே மாற்றியமைக்கப்பட்டது. கடைசியாக 18.11.2011 அன்று பேருந்து கட்டணம் மாற்றியமைக்கப்பட்டது. கடந்த 6 வருடங்களாக பேருந்து கட்டணம் மாற்றியமைக்கப்படவில்லை. ஆனால், அண்டை மாநிலங்கள் பேருந்து கட்டணத்தை எரிபொருள் விலை உயர்வு மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காக பல முறை உயர்த்தியுள்ளன. **கடந்த 2000–ஆம் ஆண்டு முதல் இன்றைய தேதி வரை கர்நாடகா 16 முறையும், ஆந்திர பிரதேசம் மற்றும் கேரளா தலா 8 முறையும் பேருந்து கட்டணத்தை மாற்றியமைத்துள்ளன.** தமிழ்நாட்டிலுள்ள அடிப்படை பேருந்துக் கட்டணம் பிற அண்டை மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் குறைவானது. கடந்த 7 வருடங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதி நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு ரூ.12,059.17 கோடியினை மானியமாக வழங்கியுள்ளது. அரசு போக்குவரத்துக்

கழகங்களுக்கு இதுவரை ஏற்பட்டுள்ள தொடர் நட்டம் ரூ.20,488 கோடியாக உள்ளது. அரசு, பேருந்துக் கட்டணத்தின் உயர்வினை இதுவரை தவிர்த்த போதும், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பாக இயங்கிடவும், நிதி நெருக்கடியை சமாளிக்கவும், பொதுமக்களுக்கு சிறந்த போக்குவரத்து சேவையினை தொடர்ந்து வழங்கிடவும், தற்போது பேருந்துக் கட்டண உயர்வு தவிர்க்க முடியாததாக உள்ளது.

(ஆ) சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் **நீதிப்பேராணை எண்.10126/2017** வழக்கில் நீதியரசர் மணிக்குமார் மற்றும் நீதியரசர் கோவிந்தராஜ் ஆகியோரை கொண்ட அமர்வு, 24.11.2017 அன்று வழங்கிய இடைக்கால உத்தரவில்,

> **46. Data furnished in the supporting affidavit shows that the present bus fare is inadequate to meet, even the operational cost. With the existing funds and resources, maintenance cost, debt, loss and such other economic factors, considered supra, in our considered opinion, the need to revise bus fare, appears to be inevitable, though it may cause inconvenience.**
>
> **47. Though there is likelihood of inconvenience, State cannot ignore the economic factors, which ought to have been considered. Considering the financial position of the State Transport Corporations, reflected in the supporting affidavit of the Additional Chief Secretary to the Government, Transport Department, State of Tamil Nadu, we are of the view that the State has a duty to take a positive decision, on the aspect of the revising the bus fare".**
>
> **48. Effective functioning of the State Transport Corporations depends on the decision of the Government. We have made the above observation and it is for the Government of Tamil Nadu to take a positive decision and to act accordingly"**

என்று கூறியுள்ளது.

**(இ)** இச்சூழ்நிலையில், பேருந்துக் கட்டணம் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் பிற அண்டை மாநிலங்களின் பேருந்து கட்டணத்தைவிட பெரும்பாலும் குறைவாகவே உள்ளது.

## மாற்றியமைக்கப்பட்ட புறநகர் கட்டணம் (Mofussil)

| குறைந்தபட்ச பயணக்கட்டணம் (ரூபாயில்) | | |
|---|---|---|
| புறநகர் | தற்போதைய கட்டணம் | மாற்றியமைக்கப்பட்டுள்ள புதிய கட்டணம் |
| சாதாரண (10 கி.மீ) | 5 | **6** |
| விரைவு | 17<br>(30Km) | **24<br>(30 Km)** |
| அதி சொகுசு<br>இடைநில்லாப் பேருந்துகள்<br>புறவழிச்சாலை இயக்கப் பேருந்துகள்<br>(1–1) – (30 கி.மீ) | 18 | **27** |
| அதிநவீன சொகுசு (30 கி.மீ) | 21 | **33** |
| குளிர்சாதனம் (30 கி.மீ) | 27 | **42** |
| வோல்வோ (30 கி.மீ) | 33 | **51** |
| மலை | | |
| சாதாரணம் (6 கி.மீ) | 4 | மேலே குறிப்பிட்டுள்ள அடிப்படை பயணக் கட்டணம் + **20%** |
| விரைவு (30 கி.மீ) | 20 | |

## பிற மாநில கட்டணங்களுடன் மாற்றியமைக்கப்பட்ட புறநகர் கட்டண ஒப்பீடு

(கி.மீ. ஒன்றுக்கு / பைசாவில்)

| மாநிலம் | கடைசியாக கட்டணம் திருத்தம் செய்யப்பட்ட நாள் | புறநகர் (சாதாரணம்) | விரைவு / சொகுசு | அதி சொகுசு | அதிநவீன சொகுசு | குளிர்சாதனம் | வால்வோ |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு<br>பேருந்து கட்டணம் திருத்தப்பட்டபடி | | **60** | **80** | **90** | **110** | **140** | **170** |
| **ஆந்திரபிரதேசம்** | 24.10.2015 | 63.70* | 87 | 98 | 116 | 146 | 182 |
| **கேரளா** | 20.05.2014 | 64* | 72 | 90 | 90 | 110 | 130 |
| **கர்நாடகம்** | 10.01.2015 | 59 | 90 | 112 | 131 | 177 | 190 |

*** தமிழ்நாட்டில், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் சாதாரண புறநகர் பேருந்தின் புதிய கட்டணம், கேரளா மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களின் கட்டணத்தை விட குறைவானதாகும். மேலும், அக்கட்டணங்களை அம்மாநில அரசுகள் ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு முன்பாகவே உயர்த்திவிட்டன.**

## <u>மாற்றியமைக்கப்பட்ட நகர் மற்றும் மாநகர் பேருந்துக் கட்டணம் (Town / City/Chennai)</u>

(ரூபாயில்)

| வ. எண் | இயக்க வகை | தற்போதுள்ள கட்டணம் | | மாற்றியமைக்கப்பட்டுள்ள புதிய கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1. | மாநகர / நகர இயக்கம் (மாவட்டங்களில்) (1 முதல் 20 நிலை வரை) (Stage) | 3 | 12 | 5 | 19 |
| 2. | மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை. (1 முதல் 28 நிலை வரை) (Stage) MTC | 3 | 14 | 5 | 23 |

## <u>நகரக் கட்டணம் (சென்னை மாநகர் கட்டணம் தவிர) – ஒப்பீடு கட்டண அட்டவணை</u>

(ரூபாயில்)

| **நிலை** | **முதல் நிலை** | **இறுதி நிலை** |
|---|---|---|
| | | |
| **பேருந்து கட்டணம் மாற்றியமைக்கப்பட்டபடி, தமிழ்நாடு** | 5 | 19 |
| **கர்நாடகம்** | 5 | 18 |
| **ஆந்திர–பிரதேசம்** | 7 | 28 |

## <u>மாநகர் கட்டணம், சென்னை – ஒப்பீடு கட்டண அட்டவணை</u>

(ரூபாயில்)

| நிலை | முதல் நிலை | இறுதி நிலை |
|---|---|---|
| பேருந்து கட்டணம் மாற்றியமைக்கப்பட்ட படி, தமிழ்நாடு | 5 | 23 |
| பெங்களூர்–பெங்களூர் மா.போ.க. | 5 | 31 |

## <u>வோல்வோ நகர (குளிர் சாதனம்) பேருந்து</u>

(ரூபாயில்)

| **வோல்வோ பேருந்து (Volvo Bus)** | தற்போதுள்ள கட்டணம் | | மாற்றியமைக்கப்பட்டுள்ள புதிய கட்டணம் | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| **(1 முதல் 38 நிலை வரை) (Stage)** | 15 | 100 | 25 | 150 |

## II. விபத்து இழப்பீடு, தடுப்பு மற்றும் சுங்கக் கட்டண நிதியம் :

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து பணியாளர்களின் சிறந்த செயல்பாடுகளையும் மீறி தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், சாலை விபத்துகள் நடைபெறுகின்றன. விபத்து இழப்பீட்டினை சரியான நேரத்தில் வழங்க முடியாததால் **23.7.2017** அன்றுள்ளவாறு, **652** அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் நீதிமன்ற பிணையில் உள்ளன. மேலும், சுங்க கட்டணமாக மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.**12** கோடியினை அரசு போக்குவரத்துக் கழகங்கள் செலுத்துகின்றன. அண்டை மாநிலங்களில் காப்பீடு மற்றும் சுங்கவரி செலுத்தும் பொருட்டு பேருந்து கட்டணத்துடனேயே ஒரு பகுதியாக வசூலிக்கப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் தற்போது காப்பீட்டுத் தொகை மற்றும் சுங்கவரி பயணக் கட்டணத்துடன் வசூலிக்கப்படுவதில்லை. எனவே, விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான ஒருங்கிணைந்த நிதியம் (Fund) ஒன்றை புதிதாக உருவாக்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. இந்நிதியத்தின் கீழ் வரும் அனைத்து வருவாயும் தனித்தலைப்பின் கீழ் வைக்கப்படும். எனவே, கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து இழப்பீடு, விபத்து தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான ஒருங்கிணைந்த நிதியம் உருவாக்க தற்போது அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியம், “விபத்து இழப்பீடு, விபத்து தவிர்த்தல் மற்றும் சுங்கக் கட்டண நிதியம்” என அழைக்கப்படும். தனியார் போக்குவரத்து நிறுவனங்களும் இதுபோன்ற விபத்து இழப்பீடு, விபத்து தவிர்த்தல் மற்றும் சுங்கக் கட்டண நிதியம் உருவாக்கிக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றன. சாலை விபத்தைத் தவிர்க்கும் ஒரு பகுதியாக, அனைத்து அரசு அதி விரைவு பேருந்துகளிலும் “வேகக் கட்டுப்பாட்டுக் கருவி” பொருத்தப்பட்டு அது செம்மையாக பராமரிக்கப்படும்.

| பயணிகளிடமிருந்து வசூலிக்கப்படும் விபத்து / சுங்க வரி | | | |
|---|---|---|---|
| வரிசை எண் | பயண கட்டண வரம்பு | நகர் | புறநகர் |
| | | பயணிகளிடமிருந்து தீர்வை (ரூபாயில்) | பயணிகளிடமிருந்து தீர்வை (ரூபாயில்) |
| 1 | ரூ.25 வரை | 1 | 1 |
| 2 | ரூ.26 முதல் ரூ.50 வரை | –– | 2 |
| 3 | ரூ.51 முதல் ரூ.75 வரை | –– | 3 |
| 4 | ரூ.76 முதல் ரூ.100 வரை | –– | 4 |
| 5 | ரூ.101 முதல் ரூ.200 வரை | –– | 5 |
| 6 | ரூ.201 முதல் ரூ.300 வரை | –– | 6 |
| 7 | ரூ.301 முதல் ரூ.400 வரை | –– | 7 |
| 8 | ரூ.401 முதல் ரூ.500 வரை | –– | 8 |
| 9 | ரூ.501 –க்கு மேல் | –– | 10 |

<u>**பிற மாநில காப்பீட்டு கட்டணங்களுடன் ஒப்பீடு**</u>

| | பயண கட்டண வரம்பு (ரூபாயில்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மாநிலங்கள்** | 25 வரை | 26 முதல் 50 வரை | 51 முதல் 75 வரை | 76 முதல் 100 வரை | 101 முதல் 200 வரை | 201 முதல் 300 வரை | 301 முதல் 400 வரை | 401 முதல் 500 வரை | 501 –க்கு மேல் |
| **தமிழ்நாடு** | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **10** |
| **கர்நாடகம்*** | **–** | **–** | **–** | **–** | **1** | **1** | **1** | **1** | **1** |
| **கேரளா** | **–** | **2** | **3** | **4** | **10** | **10** | **10** | **10** | **10** |

*** கர்நாடகா மாநிலத்தில் சுங்கவரிக்கென்று தனியாக கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. ஆனால், தமிழ்நாட்டில் விபத்து காப்பீடு மற்றும் சுங்கவரிக்கென்று ஒருங்கிணைந்து கட்டணம் வசூலிக்கப்படவுள்ளது.**

## III. <u>உயிரிழப்பு மற்றும் காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை :</u>

அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் விபத்துகளால் உயிரிழப்பு, பெரும் மற்றும் சிறு காயம் அடைபவர்களுக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் இசைவுடன் (consent), இழப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படும்.

**<u>உயிரிழப்பிற்கான இழப்பீட்டுத் தொகை :</u>**

| வயது வரம்பு | ரூ. |
|---|---|
| **1 – 15** | **2.5 இலட்சம்** |
| **16 – 60** | **5 இலட்சம்** |
| **60 வயதுக்கு மேல்** | **2.5 இலட்சம்** |

**<u>காயங்களுக்கான இழப்பீட்டுத் தொகை :</u>**

| | | |
|---|---|---|
| **1)** | சிறுகாயம் – I<br>சிறுகாயம் – II<br>மருத்துவமனையில் சிகிச்சை (2 நாட்கள்) | **ரூ. 10,000**<br>**ரூ. 25,000** |
| **2)** | தலை காயம் மற்றும் நிரந்தர உறுப்பு இழப்பு | **ரூ. 5,00,000** |
| **3)** | பெரிய காயம் மற்றும் எலும்பு முறிவு – மருத்துவமனையில் 7 நாட்கள் சிகிச்சை<br>எலும்பு முறிவு – மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சை | **ரூ. 2,00,000**<br>**ரூ. 1,00,000** |

## IV. <u>எதிர்காலங்களில் பேருந்து கட்டணம் மாற்றியமைக்கப்படும் முறை (Indexing Method)</u> :

எதிர்காலங்களில் எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் விலை ஏற்றங்கள், இயக்கச் செலவுகள், பழுது நீக்கும் செலவுகள் மற்றும் பராமரிப்பு செலவுகளில் ஏற்படும் மாற்றங்கள், பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு போன்றவற்றை உள்ளடக்கிய அளவீட்டு குறியீட்டின் அடிப்படையில், அரசு உயர்

அதிகாரிகளைக் கொண்ட குழுவினால் பேருந்து கட்டணம் மாற்றியமைக்கப்படும்.

**மாற்றியமைக்கப்பட்ட புதிய பேருந்துக் கட்டணம், தனியார் பேருந்துகளுக்கும் பொருந்தும். மாற்றியமைக்கப்பட்ட புதிய பேருந்து கட்டணம் 20.1.2018 அன்று முதல் அமல்படுத்தப்படும்.**

* * * * *

**வெளியீடு : இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**
**நாள் : 19.1.2018**